# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்


ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 285 | சனி, மே 04, 2024 | 13 பக்கங்கள்

தமிழ்த் தேசியப் பற்றாளர்

**ஈழவேந்தன்**

ஐயாவுக்கு

**'இலக்கு'**

தனது அஞ்சலியைச்

செலுத்துகின்றது



# இவர்களை யாராலுமே தட்டிக்கேட்க முடியாது

ரவிகரன் துரைராஜா செவ்வி

# தமிழர் தரப்பு ஜனாதிபதி தேர்தலை எப்படிப் பயன்படுத்தப்போகின்றது?

அகிலன்



# முழு அளவிலான ஓர் யுத்தத்தை நோக்கி உலகைத் தள்ளும் அமெரிக்க, பிரித்தானிய அரசுகள்

தமிழில்: ஜெயந்திரன்

# தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்க பொதுக் கட்டமைப்பு தீர்மானம்



ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கான சிவில் சமூகத்தின் கூட்டுத்தீர்மானம் கடந்த செவ்வாய்க்கிழமை(30) வவுனியாவில் கூடிய பொது அமைப்புக்களால் எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் ஒரு தேச மாகத் திரள்வதும் சிந்திப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில் இன்று வவுனியா வாடிவீடு விடுதியில் ஒன்றுகூடிய தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகத்தினர் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர் என இந்தக் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுய நிர்ணய உரிமையையும் பிரயோ**

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வடக்கு கிழக்கு பகுதிகளில் அருகிவரும் செண்பகம்




தமிழீழத்தின் தேசியப் பறவையான செண்பகம் பறவையின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் குறைந்துவருவதால் அதனை பாதுகாக்குமாறு சமூகவலைத்தளங்களில் கவனயீர்ப்பு செய்திகள் பகிரப்பட்டு வருகின்றன.

செண்பகம் மற்றும் அதன் கிளையினங்கள் இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் வாழ்கின்றன. இவை காக்கைகளை விட சற்று பெரியதாகவும், நீண்ட வால் மற்றும் காவிநிற இறக்கைகளைக் கொண்டதாகவும் இருக்கும். இவை தமிழீழத்தில் தத்தித் தத்தி திரிவதைக் காணலாம்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# சொல்ஹெய்மின் கருத்துக்கு அம்பிகா பதிலடி



வடபகுதி அமைதியாக உள்ளது. அதுசிறப்பானவிடயம். பாதுகாப்பு சிறப்பாக உள்ளது என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் டுவிட்டரில் பதிவிட்டுள்ள கருத்திற்கு கடும் பதிலடி கொடுத்துள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், இராணுவத்தினர் அங்கு தங்கள் முகாம்களை விஸ்தரிக்கின்றனர். ஊடகங்கள் சிவில் சமூகத்தினர் போன்றவர்களை கடுமையாக கண்காணிக்கின்றனர், துன்புறுத்துகின்றனர். இது அமைதிக்கு மாறான நிலையை ஏற்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அம்பிகா சற்குணநாதன் மேலும் தெரிவித்த போது, “இலங்கையின் வட பகுதி கடுமையாக இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு தரப்பினர் சிவில் சமூகத்தினரை மாற்றுக் கருத்துடையவர்களை ஊடகங்களை கண்காணிக்கின்றனர். துன்புறுத்துகின்றனர். அச்சுறுத்துகின்றனர்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ரஸ்யாவின் மே தின விழாவில் கைப்பற்றப்பட்ட நேட்டோ படைத்துறை ஆயுதங்கள்

உக்ரைனில் கைப்பற்றிய நேட்டோ நாடுகளின் படைத்துறை வாகனங்களை ரஸ்யா தனது தலைநகர் மொஸ்கோவில் கடந்த புதன்கிழமை(1) மே தின விழாவின் பொது காட்சியகப்படுத்தியதை பெருமளவான மக்கள் கண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேட்டோ கூட்டமைப்பு உக்ரைனுக்கு வழங்கிய ஆட்டிலறி பீரங்கிகள், பிரதான போர் டாங்கிகள், கவச வாகனங்கள், உட்பட 12 நாடுகள் வழங்கிய 32 இற்கு மேற்பட்ட வாகனங்கள் மற்றும் பெருமளவான ஆயுதங்களை ரஸ்யா காட்சியகப்படுத்தியள்ளது. போரின் போது கைப்பற்றப்பட்ட இந்த ஆயுதங்களில் பல சேதமடைந்தும், சில சேதமடையாமலும் உள்ளன. அமெரிக்காவின் பிரதான போர் டாங்கியான அப்ராம் டாங்கி (M1A1 SA Abrams) , ஜேர்மனியின் பிரதான போர் டாங்கியான லெபாட் (Leopard 2A6) டாங்கி என்பன அவற்றுள் முக்கியமானவை.



அமெரிக்காவின் ஜவலின் ஏவுகணைகள், கலிபர் வகை துப்பாக்கிகள் மற்றும் உக்ரைனின் தயாரிப்பு ஆயுதங்கள் டாங்கிகள், கவசவாகனங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் அடங்குகின்றன. கைப்பற்றப்பட்ட பல ஆயுதங்களை ரஸ்யா ஈரான் மற்றும் வடகொரியா போன்ற நாடுகளுக்கு பரிசோதனைகளுக்காக அனுப்பிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்ரேலுடனான உறவுகளை முறித்துக்கொண்டது கொலம்பியா



இஸ்ரேலுடன் தமக்குள்ள இராஜதந்திர உறவுகளை நிறுத்திக்கொள்வதாக கொலம்பியாவின் அரச தலைவர் குஸ்ராவோ பெஸ்ரோ கடந்த புதன்கிழமை(1) இடம்பெற்ற மே தின நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

காசா பகுதியில் போர் நிறுத்தம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள்சபையின் கோரிக்கையையும் நிராகரித்து இஸ்ரேல் அங்கு ஒரு முழு அளவிலான இனப்படுகொலையை மேற்கொள்வதறாகவும், அதில் குழந்தைகளும், சிறுவர்களும் பெருமளவில் கொல்லப்பட்டு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இஸ்ரேலை தண்டிக்க அனைத்துலக நீதிமன்றத்திற்கு உரிமையில்லை – அமெரிக்கா

நெதர்லாந்தின் ஹெக்கைத் தளமாகக் கொண்ட அனைத்தலக குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேலின் குற்றங்களைத் தண்டிக்க முடியாது. அதற்கு எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம் என அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் துணைப் பேச்சாளர் வேடன்ற் பட்டேல் கடந்த செவ்வாய்க்கிழமை(30) தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் ஏழாவது மாதத்தை எட்டியுள்ள நிலையில் அங்கு 34,000 மக்கள் கொல்லப்பட்டும், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும் உள்ளதுடன், 1.4 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 80 விகிதமான குடிமனைகளும் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இஸ்ரேலிய பிரதமர், பாதுகாப்பு அமைச்சர்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கு இந்திய காவல்துறை உதவவில்லை




வன்முறையில் ஈடுபட்ட குழுவினர் பெண்களின் ஆடைகளை களைந்து அவர்களை வன்புனர்வுக்கு உட்படுத்தி பின்னர் படுகொலை செய்ததை இந்திய காவல்துறையினர் வேடிக்கை பார்த்து நின்றதாகவும், அவர்களை காப்பாற்ற முன்வரவில்லை எனவும், சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட மத்திய விசாரணைப் பிரிவு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மே மாதம் இடம்பெற்ற இந்த சம்பவம் இந்தியாவிலும், அனைத்துலக மட்டத்திலும்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. மனிபூர் பகுதியில் இடம் பெற்ற இந்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மேதின கூட்டங்களில் தமிழ் அரசியல் தலைவர்கள் பேசியவற்றில் முக்கிய பகுதிகளை இங்கு தருகின்றோம்.

## தமிழரசுக் கட்சியை மக்கள் மன்றத்தின் முன் கையளிக்கிறேன் - சிறீதரன்



*"இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், அதன் எதிர்காலத் தலைமைத்துவத்தையும் மக்கள் மன்றத்தின் முன் கையளித்து, தமிழ்த் தேசிய மே நாளன்று புரட்சிகர அரசியல் பயணமாக எனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கின்றேன்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.*

*கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 38 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப் போடும், ஆயிரக்கணக்கான பொது மக்களின் பங்கேற்போடும் கிளிநொச்சியில் நேற்று பேரெழுச்சியுடன் நடைபெற்ற தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, அந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

## பொதுவேட்பாளரைக் கண்டு அஞ்சும் சிங்கள ஆதரவுக் கட்சிகள் - விக்னேஸ்வரன்

*பொது வேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது போய்விடும் என்று பலர் அஞ்சுகின்றார்கள். இனக்கலவரம் வெடிக்கும் என்கின்றார்கள். இன்றைய ஆபத்தான பொருளாதார சூழலில் கலவரங்கள் ஏதேனும் வெடித்தால் நாட்டின் நிலை அதலபாதாளத்திற்குத் தள்ளப்பட்டுவிடும் என்பதை எமது அரச தலைவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். ஆகவே கலவரங்கள் ஏற்பட விடமாட்டார்கள் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.*

*தமிழ் தேசியக்கட்சிகளின் மே தின நிகழ்வு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய முன்றிலில் புதன்கிழமை(1) இடம்பெற்ற போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், "போராட்டம் இல்லாது நாம் எமது இன்றைய இழிநிலையை மாற்ற முடியாது. போராட்ட மனோ நிலையை நாங்கள் கைவிட்டோமானால் இழந்த உரிமைகளை நாம் திரும்பவும் பெறமுடியாது. ஆயுத மேந்திப் போராடுவது மட்டும் போராட்டம் என்று நாம் நினைக்கக்கூடாது. அவ்வாறான ஒரு மனநிலையில்தான் இன்று ஒரு தமிழ்ப் பேசும் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கவேண்டும் என்று சொல்லி வருகின்றோம்.*

*பொது வேட்பாளர் தேர்தலில் நாம் தேர்தலில் வெல்ல போட்டியிடவில்லை. பின்எதற்காக என்று கேட்டால் எமது நிலையை எமது மக்களுக்கும் மற்றையோருக்கும் தெளிவுபடுத்தவும் மக்கள் தீர்ப்பு ஒன்றை வட கிழக்கு மாகாணங்களில் பெற ஆவனசெய்யவுமேதான் இந்த ஏற்பாட்டை வலியுறுத்துகின்றோம் என்று விக்னேஸ்வரன் தெரிவித்தார்.*

## 13 ஆவது திருத்தத்தை முழுமையாக தருவோம் - மனோ

*"சஜித் பிரேமதாச, என் முன்னிலையில்*

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

இலக்கு

# இறைமையுள்ள ஈழத்தமிழரை சமூகமாக மடைமாற்றம் செய்த சிங்கள மேதினக் கூட்டங்கள்

மே தினம் என்பது உலகப் பொதுமையில் தொழிலாளர் உரிமைக்குரல். ஆனால் சிறிலங்காவில் மே தினம் என்பது உட்கட்சிப்பூசல்களில் தம்கட்சிக்கே மக்கள் பலம் உண்டெனப் பார்ப்பவரை மயக்கி வரவிருக்கும் சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் என்பவற்றை எதிர்கொள்வதற்கான பரப்புரைக் களமாகவே முன்னெடுக்கப்பட்டது.

இந்த மே தினக் கூட்டங்களில் இலங்கைத் தீவின் முக்கிய பிரச்சினையாகவுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கைத் தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையைக் கொண்டுள்ள ஈழத்தமிழர்களின் தேசியப்பிரச்சினையான அவர்களின் இறைமையின் அடிப்படையிலான தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளுக்கான வாழ்வியல் பாதுகாப்புக் குறித்த அரசியல் தீர்வுக்கான எதுவிதமான கருத்துக்களும் பேசப்படவில்லை. அதற்கு மாறாக பிரித்தானிய காலனித்துவம் தன்னிச்சையாகத் தனது நலனுக்காக அடையாளப்படுத்திய ஈழத்தமிழர்கள் சிறுபான்மை இனம் (Ethnic minority) என்ற வகைமைப்பாடு ஈழத்தமிழருக்கு அளிக்கக் கூடிய அனைத்துலகச் சட்டப் பாதுகாப்பையும் நீக்கி அவர்கள் சிறுபான்மை சமுகம் (Community) எனச் சகல சிங்களக் கட்சிகளாலும் அழைக்கப்படும் பழக்கத்தை இம்மேதினம் வழக்கமாக்கியது. ஈழத்தமிழர்கள் சமுகம் சிங்கள பௌத்த நாட்டில் அதன் இரண்டாந்தரக் குடிகளாகத் தம் சமுக பொருளதார அரசியல் ஆன்மிக வாழ்வை வாழ்வதற்குக் கட்டாயப்படுத்தப்படுகையில் எந்த அனைத்துலகச் சட்டமும் சிறிலங்காவின் இறைமையை மீறி அவர்களுக்கு உதவ இயலாத சட்ட மேலாண்மையைச் சிறிலங்கா நடைமுறையில் பெறுவதற்குத் திட்டமிட்ட முறையில் இது செயற்படுத்தப்பட்டுள்ளது. கூடவே இது சிறிலங்காவில் காணப்படும் சட்டத்தின் முன் அனைவரும் சமமற்றவர்கள் என்ற ஆட்சி முறையை நியாயப்படுத்தும் செயற்பாடாக அனைத்துச் சிங்களக் கட்சிகளாலும் அவற்றின் மேதினக் கூட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் தேசிய மக்கள் சக்திக் கட்சிக்கே அதிகளவில் மேதினத்தில் பங்கேற்றனர் என்பது ஊடகங்கள் தரும் செய்தியாகவுள்ளது. இந்த மக்கள் ஆதரவுப் பெருக்கமே அமெரிக்க மேற்குலக இந்திய நாடுகளினதும் அவர்களது ஆதரவு நாடுகளினதும் கூட்டு மூலம் சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்திக் கட்சியினரை இவர்களின் சிறிலங்காவுக்கான தூதுவர்கள் அனைவரும் சென்று சந்தித்து வருவதன் உட்பொருளாகவுள்ளது. கூடவே தங்களின் நாடுகளுக்கு அமெரிக்கா இந்தியா கனடா சுவீடன் என அழைத்துப்பேசியும் வருகின்றனர். கடந்த வாரத்தில் கூட நோர்வேயின் தூதுவர் தேசிய மக்கள் சக்தி கட்சியினருடன் பேச்சு நடாத்தியுள்ளார். இவர்கள் சிறிலங்காவில் நிலவும் வறுமை, வேலையின்மை, உணவின்மை நாளாந்த வாழ்வின்மை என்பன சிங்கள வாக்காளர்களை தேசிய மக்கள் சக்திக் கட்சிக்கு வாக்களிக்க வைத்து அவர்களின் தலைமையில் சிறிலங்கா வருமானால் அவர்கள் தங்களின் அரசியலின் பிறப்பு நிறமான சிவப்பு வண்ணத்துள் மூழ்கிவிடலாம் என்ற அச்சத்தில் அதனைத் தடுக்கப்படாதபாடு பட்டு வருகின்றன. இந்த நிலையில் சீனாவின் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்க மூலவர்களே தேசிய மக்கள் சக்திக் கட்சியினரை தேடிச்சென்று பேசியுள்ளமை அமெரிக்க மேற்குலக இந்தியக் கூட்டு நாடுகளுக்குப் பலத்த அச்சத்தை அளிக்கிறது.

அத்துடன் சீனா சிறிலங்காவின் பிரதமரை தன்னுடன் செய்த ஐந்து ஒப்பந்தங்களை நடைமுறைக்குக் கொண்டு வருமாறு பலத்த அழுத்தங்களையும் கொடுத்து வருகிறது. அதே வேளை அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன் அவர்கள் தனது தேர்தலுக்கான நிதி திரட்டும் நிகழ்ச்சியில் யப்பானும் ரஸ்யாவும் இந்தியாவும் பொருளாதாரத்தில் ஏன் தடுமாறுகின்றார்கள் என்றால் அவர்கள் இனவெறி கொண்டவர்கள் அவர்களிடம் அந்நிய வெறுப்பு அதிகமாகவுள்ளது என்று பேசியுள்ளமையும், அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு குறித்து வேவு பார்த்த இரு றோ அமைப்பினரை அவுஸ்திரேலியா வெளியேற்றியது என அமெரிக்க ஊடகப் பின்னணியில் வெளிவந்த செய்திகளும் ஏற்கனவே கனடாவின் நிலையும் இந்திய அமெரிக்கப் போட்டிகளும் தொடர்கதையாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதனால் இந்தியா தனது பாதுகாப்பு குறித்த விடயங்களில் குறிப்பாக அயலகத்தில் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டிய தேவை இயல்பாகிறது. இதனால் பாரதிய ஜனதா கட்சியின் வெளிவிவகார பிரிவின் பொறுப்பாளர் தனது நட்பு நாடுகளான பத்து நாடுகளின் பதினெட்டுக் கட்சிகளின் பிரதிநிதிகளை டில்லிக்கு அழைத்து நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் கூட்டான பொதுஜனபெரமுனையையும் மட்டும் டில்லி அழைத்துள்ளது. இது யார் வென்றாலும் அவர்களுடன் இணைவாகப் பயணித்தே இந்தியா தனது மேலாண்மையை இலங்கைத்தீவில் தொடர்வதற்கான ஆயத்தங்களுடன் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. அதே நேரம், சிங்கள மேதினக் கூட்டங்களில் சஜீத் பிரேமதாசா நேரடியாகவே 13 வது திருத்தத்தை முழுமையாகவே நடைமுறைப்படுத்துவேன் என இந்தியாவைத் தானும் திருப்திப்படுத்த, அநுரகுமாரவோ பல்லின நாடாக அனைவரும் சமத்துவமாக அமையக் கூடிய தீர்வு முறையை உருவாக்குவதுதான் தமது கட்சியின் நோக்கு என்றாலும் தமிழர் மாகாணசபையைத்தான் விரும்பினால் அதனைக் கொடுப்போம் எனத் தானும் இந்தியாவைத் திருப்திப்படுத்தி வருகின்றார்.

இவ்வாறாகச் சிங்களக் கட்சிகளின் மேதினச் செய்திகள் அமைகையில் தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்ற மே தினக் கூட்டங்களும் ஜனாதிபதி தேர்தல் தங்கள் உட்கட்சிப் பிரச்சினைகள் என்பவற்றுக்கே சிங்களக்கட்சிகள் போல முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியாவில் நடத்திய மே தினக் கூட்டத் தீர்மானங்களே, தமிழ்த்தேச அங்கீகாரத்தையும், அதனுடைய தனித்துவமான இறைமையையும், தன்னாட்சி உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய சமஷ்டி ஆட்சி அடிப்படையிலான தீர்வை இந்தியாவும் மற்றைய நாடுகளும் சிறிலங்காவிடம் வலியுறுத்த வேண்டுமென ஈழத்தமிழரின் அரசியல் குரலாக ஒலித்தது. மேலும் மலையகத் தொழிலாளர்கள் உரிமைகள், தமிழ்த்தேச விவசாயிகள் உரிமைகள், ஈழத்தமிழ் மீனவர் பிரச்சினைகள் அவரவர்கள் தங்கள் கடற்பரப்பில் சுதந்திரமாக மீன்பிடித்து வாழக் கூடிய வகையில் வெளிநாட்டு மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்டுத் தீர்க்கப்பட்டு மீனவர் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஈழத்தமிழரின் உழைப்பாளர் குரலாகவும் அமைந்தது. அத்துடன் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13வது திருத்தம் உட்பட்ட எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்கக் கூடாதெனவும் ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் தமிழ்த்தேசம் தனது தன்னாட்சிக்கான உறுதியை வெளிப்படுத்த வேண்டுமெனவும் அழைப்பை விடுத்தது. கூடவே ஈழத்தமிழினத்தின் மேலான இனப்படுகொலைக்கு அனைத்துலக குற்றவியல் விசாரணைகள் வலிந்து காணாமல் குறித்த அனைத்துலக நீதிவிசாரணைகள் நடத்தப்பட்டு அவர்களுக்கு நிவாரணங்கள் அளிக்க வேண்டுமெனவும் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை போரால் பாதிக்கப்பட்ட இடமாக அறிவித்து அனைத்துலக உதவிகளை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அளிக்க வேண்டுமெனவும் கூடவே பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் பெற்றோரை இழந்த சிறுவர்கள் முன்னாள் போராளிகள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான சிறப்பு உதவிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தியது. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், நீக்கப்பட்டு அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், ஊடகச் சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் நசுக்கும் நோக்கில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என நீதியின் குரலாகவும் ஒலித்தது. அம்பாறை மாவட்ட கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் அதிகாரங்களைப் பறிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அலுவலகத்துக்கு கணக்காளர் ஒருவர் உடன் நியமிக்கப்பட வேண்டும் எனவும் தமிழர் தாயகத்தின் ஒருங்கிணைந்த தேவைகளையும் வலியுறுத்தியது. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றலையும் தமிழ்த் தேசிய மக்கள் கட்சி முன்னெடுக்க வேண்டுமென்பது இலக்கின் எண்ணம். அப்பொழுதுதான் ஈழத்தமிழர்கள் தேச இனம் என்கிற வலிமை கொண்டு தேசமாக எழுவார்கள் என்பது இலக்கின் உறுதியான கருத்து.

**ஆசிரியர்**

# தமிழர் தரப்பு ஜனாதிபதி தேர்தலை எப்படிப் பயன்படுத்தப்போகின்றது?

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது அறிவிப்பை ஜூலை மாத இறுதிப் பகுதியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கவுள்ளார். இலங்கை வங்குரோந்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்ற அறிவிப்பை சர்வதேசம் உத்தியோகபுர்வமாக வெளியிட வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார். இதன்மூலம், மக்களின் ஆதரவையும் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்று தேர்தலில் வெற்றிபெற முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு. ரணிலைப் பொறுத்தவரையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் என்ற முறையில், தனது செல்வாக்கை அவர் கட்டியெழுப்பியுள்ளார். அத்துடன், சர்வதேசமும் அவர் ஆட்சியில் தொடர்வதைத்தான் விரும்புகின்றது. ஆனால், ராஜபக்ஷக்களையும் அரவணைத்துக்கொண்டு தமிழ் வாக்குகளை எவ்வாறு கவர்வது என்பதுதான் அவருக்குள்ள பிரதான பிரச்சினை!



ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து தமிழ் மக்களின் வாக்குகளை எவ்வாறு கவரலாம் என்பதில் பிரதான வேட்பாளர்கள் அனைவருமே தமதுகவனத்தைச்செலுத்தத்தொடங்கியுள்ளார்கள். சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தமது கட்சிகளின் சார்பில் களத்தில் இறங்கப்போவதாக ஏற்கனவே அறிவித்துவிட்டனர். ரணில் விக்கிரமசிங்க தனக்கான நேரத்துக்காக காத்திருக்கின்றார். அவர் எந்தக் கட்சியின் சார்பிலும் இல்லாமல் பொது வேட்பாளராகவே களமிறங்குவார் எனவும் தெரிகின்றது. பொதுஜன பெரமுனவும் தமது சார்பில் ஒருவரை களமிறக்கவுள்ளது. மே தினப் பேரணிகளை நடத்தியதன் மூலம் தாம் பலமாக இருப்பதை இந்த நான்கு அணிகளுமே வெளிப்படுத்த முற்பட்டன.

ஜனாதிபதித் தேர்தல் நான்கு முனைப் போட்டியாக அமையுமானால், எந்த ஒருவருமே வெற்றிபெறத் தேவையான 50 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகலாம். ஏனெனில் சிங்கள வாக்குகள் நான்காகப் பிளவுபடும். பிரதான வேட்பாளர்களை அச்சுறுத்தும் பிரச்சினை இதுதான். இதனைவிட சுயேட்சையாகவும், சிறிய கட்சிகளின் சார்பிலும் சிலர் களமிறங்கினாலும் அவர்கள் ஒன்று அல்லது இரண்டு வீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற மாட்டார்கள். அதனால், தேர்தல் முடிவுகளில் அது தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்காது. மறுபுறும் தமிழர் தரப்பில் பேசப்படுவது போது தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டு, அவர் கணிசமான வாக்குகளைப் பெற்றால், அது தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறான நிலையில், தமிழர் தரப்புடன் ஏதோ ஒரு டீலுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் பிரதான வேட்பாளர்களுக்கு ஏற்படலாம். தமிழ் வாக்குகள் இந்தத் தேர்தலில் நிர்ணயிக்கும் வாக்குகளாக அமையும் என்பது சஜித், அநுர மற்றும் ரணிலுக்குத் தெரிந்தே இருக்கின்றது.



ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் தமிழ் வாக்குகள் தொடர்பில் அவர்களுக்கு அக்கறையில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது - எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் தமக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். சிங்களக் கடும்போக்காளர்களின் வாக்குகளைத்தான் அவர்கள் நம்பியுள்ளார்கள். இரண்டாவது, வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் போட்டியிட முற்படுவது வெற்றிபெறுவதற்காக அல்ல. தமது கட்சியை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காகவும், பேரம் பேசலுக்கான வாய்ப்பாகவும்தான் அவர்கள் ஒருவரை களமிறக்க சிந்திக்கிறார்கள்.



பெரமுனவின் மே தின பேரணியில் மகிந்த, பஸிலுக்கு நிகராக முன்வரிசையில் அமர்ந்திருந்த கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக பெரேரா பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கலாம் என அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. அதனால்தான் அவருக்கு முன்னணியில் ஆசனம் ஒதுக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் ஊகிக்கப்படுகின்றது.

தம்மிக பெரேரா பெரமுனவில் தமது தலைமைக்கு அவர் ஒருபோதும் சவாலாக வரமாட்டர் என ராஜபக்ஷக்கள் கருதுகின்றார்கள். 2029 இல் வரப்போகும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு நாமலைத் தயார்படுத்துவதுதான் மஹிந்தவின் திட்டம். ஆனால், கடந்த தேர்தல்களில் ஆட்சி அமைத்த கட்சி என்ற முறையில், இந்தத் தேர்தலில் ஒதுங்கியிருக்கூடாது என்ற கட்சி ஆதரவாளர்களின் கருத்தை மஹிந்த ஏற்றுக்கொண்டிருக்கின்றார். ரணில் தனது முடிவை அறிவித்த பின்னர்தான் ராஜபக்ஷக்கள் தமது வேட்பாளர் யார் என்பதை அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய பிரதான வேட்பாளர்களைப் பொறுத்தவரையில், தமிழ் வாக்குகளின் முக்கியத்து



வத்தை அவர்கள் உணர்கின்ற போதிலும், அதற்காக வழங்கக்கூடிய வாக்குறுதிகள் சிங்கள மக்களுடைய ஆதரவுத் தளத்தைப் பாதித்துவிடக்கூடாது என்பதில் நிதானமாக இருக்கின்றார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் 13 என்பதுதான் அவரது தீர்வு. கடந்த வருடமே இதனை அவர் தெரிவித்திருந்தார். ஆனால், 13 முழுமையாக – அதாவது காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூற அவர் தயாராகவில்லை. இந்த நிலையில் 13 பிளஸ் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. ஆனால், தமிழ் மக்களுடைய வாக்குகள் தமக்குத்தான் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ரணில் இருக்கின்றார். 2005 இலும் அவர் அப்படித்தான் இருந்தார்.

சஜித் பிரேமதாஸவைப் பொறுத்தவரையிலும் அதேநிலைப்பாட்டில்தான் இருக்கின்றார். ஆனால், 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைத்துக்கொள்வதாக அண்மையில் அவரைச் சந்தித்த வடக்கு கிழக்கு சிவில் அமைப்பு ஒன்றுக்கு அவர் வாக்குறுதியளித்திருக்கிறார். ஆனால், "முழுமையாக" என்ற சொல்லை அவரும் பயன்படுத்தவில்லை. ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதுதான் பதவியிலிருக்கும் அரசாங்கத்தின் பொறுப்பு. அதனை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப்பதும், அதனை வாக்குறுதியாக வழங்குவதும் இலங்கையில் மட்டும்தான் நடைபெறுகிறது.

"முழுமையாக" என்றால் அதற்குள் பொலிஸ், காணி அதிகாரங்களும் வந்துவிடும். அது சிங்கள வாக்காளர்களைத் தூண்டிவிடுவதற்குப்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



# இவர்களை யாராலுமே தட்டிக்கேட்க முடியாது

## ரவிகரன் துரைராஜா செவ்வி

**போர்முடிவுக்கு வந்த பின்னர் முல்லைத்தீவை சிங்கள மயப்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலுடன் அரசாங்கம் செயற்படுகிறது. இதற்காக, தமிழர்களின் காணிகளை அபகரித்தல், சிங்களக் குடியேற்றங்கள் என்பன தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த வாரமும் கொக்குத்தொடுவாய் பகுதியில் காணி அபகரிப்பு இடம்பெற்றது. இவை குறித்து அதனை நேரில் பார்வையிட்ட வடமாகாண முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**கொக்குத் தொடுவாய்ப் பகுதிக்கு கடந்த வாரம் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தீர்கள். அங்கு என்ன நடைபெறுகின்றது?**

வடமாகாண சபையில் நான் உறுப்பினராக இருந்த காலத்தில் இந்தக் காணிகள் சுமார் 25 ஏக்கர்படி 30 வழங்கப்படவிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, மாகாண சபையிலும் இந்த விடயத்தை நான் கதைத்திருந்தேன். இது தமிழர்களுடைய பூர்விக நிலம். இங்குள்ள பிரதேச செயலகமோ அல்லது மாவட்ட செயலகமோ சம்பந்தப்படாமல், மகாவலி அபிவிருத்தி அதிகார சபைதான் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 4,326 ஏக்கர் காணியை இந்தத் திட்டத்தின் மூலமாக அபகரிப்பதற்கான நடவடிக்கைகளை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை முன்னெடுத்திருந்தது. இந்தத் திட்டத்தில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் சகோதரிக்குக் கூட 25 ஏக்கர் காணி வழங்கப்பட்டதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் சிங்கள ஆதிக்கத்தைக் கொண்டு வந்து தமிழர்களின் பூர்வீக காணிகளை பறிக்கும் நோக்கத்துடன்தான் இவர்களுடைய செயற்பாடுகள் அமைந்திருந்தன. 25 ஏக்கர் தமிழர்கள் வைத்திருக்க முடியாதாம். எங்களுக்கு 2 ஏக்கர் காணி மட்டும்தான் வைத்திருக்க முடியுமாம்.

இந்தப்பின்னணியில்தான் கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் காணி அபகரிப்பு இடம் பெறுவதாக தகவல் வந்ததால் அங்கு சென்றேன். என்னுடன் சூழலியல், சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் வந்தார்கள். ஆனால், அன்றைய தினம் காட்டை தள்ளிக்கொண்டிருந்த ஒருவரும் இருக்கவில்லை. ஆனால், பெருமளவிலான இடங்களை அவர்கள் தம்வசப்படுத்தியிருந்தார்கள். கிணறுகள் வெட்டி, கொட்டில்கள் அமைத்து குடியிருப்பதற்கு ஏற்ற வாறு தயார்படுத்தியிருந்தார்கள்.

முல்லைத்தீவு பறிபோய்விட்டது என்று தான் சொல்ல வேண்டும். கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருணாட்டுக்கேணி, மணலாறு என்ற எங்களது இதயபுமி என்று சொன்ன பகுதியில் இன்று 13 ஆயிரத்துக்கும் மேலான சிங்களவர்கள் வழங்கியிருக்கின்றது. இந்தக் காணிகளின் உறுதிகள் தமிழர் களிடம் இன்றைக்கும் உள்ளது. ஒரு காணிக்கு ஒரு ஆவணம் இருக்கும் போது, மற்றொரு ஆவணம் வழங்கப்படுமாக இருந்தால் முதலில் வழங்கப்பட்ட ஆவணம் தான் செல்லுபடியாகும் என இலங்கைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**நீங்கள் மகாவலி அதிகார சபையின் செயற்பாடுகள் குறித்தும் சொல்லியிருந்தீர்கள். முல்லைதீவு மாவட்டத்தில் அவர்கள் எவ்வாறான நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றார்கள்?**

அவர்கள் தங்களுக்கென்று ஒரு செயற்பாட்டை வைத்துள்ளார்கள். அவர்களை யாரும் தட்டிக்கேட்க முடியாது. மாவட்ட செயலாளரோ, பிரதேச சபைகளின் செயலாளர்களோ உள்ளார்கள். வசதியான மக்களுக்கு, கிணறுகள் அமைத்து, பாதுகாப்புக்காக யானை வேலிகள் அமைத்து கொடுக்கின்றார்கள். இதனைத் தட்டிக்கேட்கக் கூடிய நிலையில் இங்குள்ள அரச அதிகாரிகள் இல்லை.

நாங்கள் பார்த்த இடங்களில் 145 ஏக்கருக்கும் அதிகமான பகுதி அழிக்கப்பட்டிருந்தமையை நாங்கள் பார்த்தோம். அதாவது, அழிக்கப்பட்டு அவர்களுடைய இருப்பு நிலை நாட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இவ்வாறு இடம்பெற்றிருக்கின்றது. இப்போது அழிக்கப்பட்ட பகுதிகளை 30 பேருக்கு 25 ஏக்கர் வீதம் மகாவலி அதிகார சபை அவர்களிடம் கேள்வி கேட்க முடியாது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கும் அவர்கள் வரமாட்டார்கள். மாகாண சபை இருந்த காலத்தில் எப்போவாவது கூட்டத்துக்கு வருவார்கள். இந்தக் காணிகள் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இருப்பதாகக் காட்டப்படுகின்றது. ஆனால், மகாவலி - எல் திட்டத்துக்குட்பட்டதாக இந்தக் காணிகள் காட்டப்படுகின்றது. இதனைவிட மேலும் பல காணிகள் மகாவலி எல் திட்டத்துக்கு உட்பட்டதாகக் காட்டப்படுகின்றது. இதன்படி முல்லைத்தீவில் மேலும் பெருமளவு தமிழ் மக்களின் காணி கள் பறிக்கப்பட்டு சிங்களவர்களுக்குக் கொடுக்கப்படும் ஆபத்து இருக்கின்றது. இந்த விடயத்தில் எம்மவர்களும் சரியான ஒரு திட்டத்தைப் போட்டு உறுதியான ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

மகாவலி அதிகார சபை எல் என்ற ஒரு திட்டத்தின் மூலமாக முல்லைத்தீவின் கிழக்குப் பக்கமாக ஒட்டுசுட்டான், கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு ஒரு திட்டத்தையும், மேற்குப் பக்கமாக மாந்தை கிழக்கு, துணுக்காய் போன்ற பகுதிகளுக்கு மகாவலி ஜே என்ற ஒரு திட்டத்தையும் கொண்டுவந்திருக்கின்றார்கள். இது இன்னும் ஆரம்பிக்கவில்லை. இந்த மகாவலி அதிகார



தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பிரிந்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் தமிழ் தேசிய அரசியலை ஒருபோதும் வலுப்படுத்தாது

மட்டு.நகரான்

சர்வதேச தொழிலாளர் தினம் கடந்த புதன்கிழமை(1) அனுஸ்டிக்கப்பட்டது. தொழிலாளர்களின் உரிமையினை வலியுறுத்தும் வகையில் இந்த தொழிலாளர் தினம் அனுஸ்டிக்கப்படுகின்றபோதிலும் அரசியல் கட்சிகள் தங்களின் செல்வாக்கினை நிலைநிறுத்துவதற்காகவும் தமது செல்வாக்கினை வெளிப்படுத்துவதற்காகவும் இந்த தொழிலாளர் தினத்தினை அனுஸ்டிக்கின்றனர்.



வடகிழக்கினைப்பொறுத்த வரையில் சர்வதேச தொழிலாளர் தினத்தை தமிழ் தேசிய மேதினமாக தமிழ் தேசிய கட்சிகளினால் அனுஸ்டிக்கப்படுகின்றது.தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய செயற்பாடு, வாழ்வாதார அழிப்பு என பல்வேறுபட்ட அத்துமீறல்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த மேதினம் அனுஸ்டிக்கப்பட்டாலும் இன்று தமிழ் தேசிய கட்சிகளும் தங்களது செல்வாக்கினை வெளிப்படுத்தவும் தமது பலத்தை காட்டவும் ஆங்காங்கே இந்த நிகழ்வினை நடாத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.மக்களை அணிதிரட்டுவதற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை கிழக்கில் தமிழர்களின் இருப்பினை பாதுகாப்பதற்கான குரலாக மாற்றவேண்டிய பொறுப்பு அனைத்து தமிழ் தேசியவாதிகளுக்கும் இருக்கின்றது.



இன்று வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய அரசியல்கட்சிகள் கட்சிகளின் இருப்பினை மட்டுமே நோக்காக கொண்டுசெயற்படும் அதே நேரம் தமிழ் தேசிய அரசியலில் அதிர்ப்தியுற்றவர்களை தங்கள் பக்கம் ஈர்க்கும் வகையிலான செயற்பாடுகளை அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் தமிழ் கட்சிகள் முன்னெடுக்கின்றன

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வுகள் தொடர்பில் எழுதவேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருக்கின்றது.ஏன் என்றால் அரசோடு சேர்ந்து செயற்படும் கட்சிகள் எவ்வாறு எல்லாம் மக்களை ஏமாற்றுகின்றார்கள்,தமிழ் தேசியத்தினை நேசிக்கும் கட்சிகளின் மக்கள் எவ்வாறு செல்கின்றார்கள் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்தவேண்டிய அவசியம் இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு மேதின நிகழ்வுகள் பிரதானமாக நடைபெற்றன. ஒன்று பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மேதின கூட்டம் மற்றையது இலங்கை தமிழரசுக்கட்சியின் மேதினக்கூட்டம். இதில் பிள்ளையானின் மேதின கூட்டத்திற்கான செயற்பாடுகள் குறித்து பேசவேண்டியது கட்டாயமாக தேவையாகவுள்ளது.

தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலை கிழக்கில் மேற்கொண்டுவரும் பிள்ளையான் போன்றவர்களின் செயற்பாடுகளை வெளியுலகுக்கு கொண்டுவரவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.பெரியளவில் மக்களை திரட்டி மேதின நிகழ்வுகளை நடாத்தி மக்கள் தங்கள் பக்கத்தில் உள்ளார்கள் என்பதை காட்;டி தமிழர்களின் மனங்களை வெல்வதற்கும் இளைஞர்களை ஒன்றுதிரட்டி சாகசங்களை காட்டி இளந்தலைமுறையினரை கவர்வதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை வெளிப்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது.



வாகரையில் சுமார் எட்டு பஸ்களில் பொதுமக்கள் ஏற்றப்பட்டார்கள்.மிகவும் வறுமையான பகுதியை சேர்ந்தவர்களுக்கு தலா 500ரூபா பணம் வழங்கப்பட்டு பஸ்களில் கூட்டிவரப்பட்டார்கள்.அத்துடன் பிள்ளையானின் கட்சிகள் ஊடாக கிராம மட்டங்கள் உள்ள மிகவும் மோசமான செயற்பாடுகளை கொண்டவர்களுக்கு 1500ரூபா பணம் வழங்கப்பட்டு மோட்டார் சைக்கிள் பேரணிக்காக அழைத்துவரப்பட்டார்கள். இதற்காக பல குழுக்கள் இறக்கப்பட்டு பெருமளவான பணம் வாரி இறைக்கப்பட்டு ஆக்களை கூட்டத்திற்கு கொண்டு சேர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதே போன்று மதுபான போத்தல்களும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வீதிகளில் பேரணி என்ற பெயரில் பல்வேறு வகையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சித்தாண்டியில் அன்றைய தினம் போராட்டம் நடாத்திய மயிலத்தமடு பண்ணையாளர்களும் இந்த மோட்டார் சைக்கிள் குழுக்களினால் மிரட்டப்பட்டுள்ளனர்.

இதேபோன்று இந்த மேதினத்திற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்களிடம் பணம் அறிவிடப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தகாரர்கள்,கட்டிட நிர்மாணப்பொருள் விற்பனையாளர்களிடமும் பெருமளவு பணம் பெறப்பட்டு இவ்வாறு வாறியிறைக்கப்பட்டு கூட்டத்திற்கு கூட்டம் சேர்த்து அதனை தங்கள் மீது அன்பாக சேர்ந்த கூட்டமாக காட்ட பிள்ளையானின் சமூக ஊடகங்கள் கதையளந்துவருகின்றது. ஆனால் இந்த செயற்பாடுகள் அனைத்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அனைவருக்கும் தெரியவந்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது.



இவ்வாறான நிலையிலேயே காசு கொடுத்து கூட்டிவந்த கூட்டத்தில் பேசிய பிள்ளையான் கிழக்கில் தமிழ் தேசியம் இல்லையெனவும் தமிழரசுக்கட்சி சின்ன பின்னமாகியதன் காரணமாக கிழக்கினை மீட்பதற்கு தங்களுடன் இணைந்துகொள்ளுமாறு கிழக்கு மக்களுக்கு பிள்ளையான் அழைப்பு விடுத்திருந்தார்.இதே போன்று திருகோணமலையிலும் மக்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்படவுள்ளதாக ஒரு தொகுதி மக்கள் அழைத்துவரப்பட்டு மேதின நிகழ்வுகள் பிள்ளையானின் கட்சியினால் நடாத்தப்பட்டுள்ளது.இதற்கிடையில் பிள்ளையானின் பேரணியின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய பாடசாலைகளும் ஒலிபரப்பப்பட்டுள்ளது.தொழிலாளர்களிடம் கொள்ளையிடப்பட்டு நடாத்தப்பட்ட இந்த மேதினம் தொடர்பில் இன்று எழுந்துள்ள விமர்சனங்கள் என்பது எதிர்காலத்தில் தமிழ் தேசிய அரசியலை நிலைநிறுத்தும் என்பதில் ஐயமில்லை.



மறுபகுதியில் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மேதின கூட்டம் தமிழ் தேசிய எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது. கிழக்கினைப்பொறுத்த வரையில் காசுக்கு செல்லும் கூட்டம் இருந்தாலும் கொள்கையிலும் உணர்விலும் பற்றுக்கொண்ட தமிழ் தேசிய பற்றாளர்களை யாரும் விலைகொடுத்து வாங்கிவிடமுடியாது என்பதை அந்த மேதின கூட்டம் வெளிப்படுத்தியிருந்தது.

கோட்டைக்கல்லாறிலிருந்து நிகழ்வு நடைபெறும் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தனியார் நிலங்கள் அபகரிப்பா?

ஹஸ்பர் ஏ ஹலீம்

தனியார் நிலங்களை அபகரித்து மக்களின் குடியேற்றம் விவசாய பூமிகளை இல்லாமல் ஆக்கி துரத்தியடிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.





திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர் பகுதியில் விவசாய காணிகளை அபகரித்து அந்நிய நாடுகளுக்கு விற்க வேண்டாம் என கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று (28.04.2024) திகதி அன்று இடம் பெற்றது.

1972ம் ஆண்டு பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சி காலத்தில் அப்போதைய பிரதியமைச்சராக செயற்பட்ட மறைந்த மர்ஹூம் ஏ .எல். அப்துல் மஜீத் அவர்களால் முத்து நகர் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. 1984ல் இலங்கை துறை முக அதிகார சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் போது துறை முக அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி அவர்களால் குறித்த முத்து நகர் காணி துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானது என வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது. ஆனால் அம் மக்களுக்கு இது வரை காணி உரித்துப் பத்திரம் வழங்கப்படவில்லை எனவும் துறை முக அதிகார சபையினர் தங்களை தொடர்ந்தும் அச்சுறுத்துவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.



1972ம் ஆண்டில் இருந்து நெற்செய்கை உள்ளிட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கை விவசாயங்களை மேற்கொண்டிருந்து தற்போது வரை விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்கள். தற்போது இங்கு மூன்று விவசாய குளங்கள் காணப்படுகிறது. சுமார் 788 ஏக்கர் விவசாய நிலங்களும் காணப்படுகிறது. 300க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த மக்கள் தங்களின் அன்றாட ஜீவனோபாயமாக விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர். துறை முக அதிகார சபையினர் எங்கள் காணியை பெற்று இந்தியாவுக்கு தாரை வார்க்க பார்க்கின்றனர். இதனை அரசாங்கம் நிறுத்தி ஜனாதிபதி எங்களுக்கான காணிகளுக்கான உரித்து படிவங்களை வழங்க வேண்டும் விவசாய குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

விற்காதே விற்காதே காணிகளை விற்காதே, விவசாய நிலங்களை மீட்டுத் தா, நாட்டின் புதுகெலும்பு விவசாயம், துறை முக அதிகார சபையே விவசாய காணிகளை அபகரிக்காதே, 1972ல் இருந்து விவசாய அநாதைகளாக நிர்க்கதியாக இருக்கிறோம் காணி உரித்து வடிவங்களை வழங்கு போன்ற வாசகங்களை உள்ளடக்கிய வகையில் பதாகைகளை ஏந்தியவாறு குறித்த முத்து நகர் விவசாய பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதில் சுமார் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். இப்படியாக மக்களின் விவசாய பூமிகள் துறை முக அதிகார சபையினரால் பறிக்கப்பட்டு இந்தியாவுக்கு நீண்ட கால குத்தகைக்காக வழங்கப்படவுள்ளதாக அறிந்து மக்கள் போராட்டம் வெடிக்கத் தொடங்கியுள்ளது. இப் பகுதியில் தகரவெட்டுவான் விவசாய குளம் இருந்த போதிலும் அதனை கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக குளம் புனரமைப்பு செய்யப்படவிருந்த போதிலும் இலங்கை துறை முக அதிகார சபையினர் அதனை தடுத்து நிறுத்தினர் இதனால் பல ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ண முடியாது பல இடர்களை அப் பகுதி விவசாயிகள் எதிர் கொண்டனர். இது தொடர்பில் அப் பகுதி குடும்ப பெண் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். “இலங்கை துறை முக அதிகார சபையினர் கடந்த மூன்று வருடகாலமாக எங்களது விவசாய குடியிருப்பு காணிகளுக்குள் புகுந்து எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது அச்சுறுத்துகின்றனர். புதிய கட்டடங்களோ விவசாய செய்கையின் போது உழுதுதல் நடவடிக்கையோ எதுவுமே செய்ய விடாது தடுத்து நிறுத்துகின்றனர். 2010,2013,2023 களில் ஒரு கோடிக்கும் அதிகமான நிதி தகரவெட்டுவான் குள அபிவிருத்திக்காக வந்த போது குறித்த திட்டத்தை செய்ய விடாது துறை முக அதிகார சபையினர் தடுத்து நிறுத்தினர். இதனால் விவசாயிகளாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். எங்களது காணி எங்க ளுக்கு வேண்டும்” என்றார்.

மக்கள் காணிகளை சூறையாடி, உள்ளக வளங்களை அந்நிய சக்திகளுக்கு கொடுப்பதனால் அப் பகுதி குடியேற்றங்கள் பாதிக்கப்படக் கூடும் அப் பகுதி மக்களை துரத்துவதாக இருந்தால் அதை விடவும் சாதகமான காணிகள் விவசாய நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும்.

மேலும் விவசாய நிலங்களை பந்தாடும் துறை முக அதிகார சபை தொடர்பில் அப் பகுதி வயோதிபர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். “1972ம் ஆண்டில் இருந்து அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் இருந்து இங்கு வாழ்கிறோம். எங்களுக்கு காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் கூட வழங்கப்படவில்லை.



விவசாயத்தை நம்பியே வாழ்கிறோம். இதனை கொண்டே குடும்பத்தின் வயிற்றுப் பசியை

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# பலிக்கடாவாக்குதல்

துரைசாமி நடராஜா

மலையக மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்னும் அதிகமுள்ளன. இவற்றுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மலையக அரசியல்வாதிகள் முயற்சித்து வருகின்றபோதும் பூரண சாதக விளைவுகளைப் பெற்றுக் கொள்வதென்பது இயலாத காரியமாகியுள்ளது. இந்நிலையில் இவ்வருடம் தேர்தல் காலமாக உள்ள நிலையில் மலையகக் கட்சிகள் இங்குவாழ் மக்களின் நலன் கருதி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளதோடு, இவற்றை நிறைவேற்ற முன்வருபவர்களுக்கே தாம் ஆதரவு வழங்கப் போவதாகவும் தெரிவித்து வருகின்றன



தமிழக வரலாற்றில் முன்னைய கால கட்டங்களில் காணப்படாத அளவிற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலட்சக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள் உலகின் பல நாடுகளுக்கும், தீவுகளுக்கும் கொண்டு சென்று குடியமர்த்தப்பட்ட வரலாறு சோகம் நிறைந்ததாகும் இவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்கள் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டனர்

அத்தோடு பிரான்சிய, பிரித்தானிய ஆட்சியாளர்களாலும், பின்பு சுதேச ஆட்சியாளர்களாலும், அந்தந்த நாடுகளையும், தீவுகளையும் சேர்ந்த சுதேச இனத்தவர்களாலும், தொழிலாளர்கள் அல்லாத ஏனைய தமிழர்களாலும், ஏனைய இந்தியர்களாலும், வணிகர்கள், அதிகாரிகள், தோட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பிற அலுவலர்கள் ஆகியோராலும் கொடூரமாகச் சுரண்டப்பட்டனர். உலகின் பல நாடுகளிலும், தீவுகளிலும் குடியேற்றப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களில் இன்று தமிழ் பேசவோ, எழுதவோ,வாசிக்கவோ தெரியாத நிலையில் சுதேச இனத்தவர்களுடன் பலர் கலப்புற்று விட்டதாக புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்



இதேவேளை இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள் தமது பயணத்தின் போது சவால்கள் பலவற்றையும் சந்திக்க நேர்ந்ததோடு சிலர் உயிரிழக்கவும் நேர்ந்தமை கொடுமையிலும் கொடுமையாகும். இலங்கைக்கு குடிவந்தவர்கள் ஒழுங்கான முறையில் கவனிக்கப்படுவதை உறுதி செய்வதற் காக 1847ம் ஆண்டு தொடக்கம் 1867ம் ஆண்டு வரை 24 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தியத் தொழிலாளர்களுக்கு இந்நாட்டில் சகலவிதமான பாதுகாப்புகளும் அளிக்கப்படும் என்று உறுதியளிக்கப்படாத நிலையில் இந்திய அரசாங்கம் மக்கள் குடியகன்று செல் வதை மறுத்து வந்தது

இந்தியஅரசாங்கம்வழங்கியசலுகைகளை இலங்கை தோட்ட உரிமையாளர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இந்திய கிராமங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் தமது குடும்பங்களுடன் இலங்கைக்கு வந்து நிரந்தரமாக குடியேறச் செய்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டதாக பேராசிரியர் சோசந்திரசேகரன் சுட்டிக்காட்டுகின்றார் இதே வேளை தொழிலாளர்களின் நலன்கருதி பல சட்டங்கள் இயற்றப்பட்டபோதும் அச்சட்டங்களினால் ஏற்பட்ட சாதக விளைவுகள் தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது பல சட்டங்கள் ஏட்டுச் சுரைக்காயாகி இருந்தன

## உரிமை மீறல்கள்

இலங்கையின் மலையகப் பகுதிகளில் குடியேறிய அல்லது குடியேற்றப்பட்ட இந்திய தொழிலாளர்கள் மிக அண்மைக் காலம் வரை சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் இலங்கையில் காலம் காலமாக வாழ்ந்து வந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களது அலட்சியத்திற்கு உள்ளானவர்களாக விளங்கினர் . அத்தோடு கூலிகள், கள்ளத்தோணிகள், வடக்கத்தையார், தோட்டக்காட்டான் என்றெல்லாம் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டதாக புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர்



மேலும் இம்மக்கள் உரிமை மீறல்கள் பலவற்றுக்கும் உள்ளான நிலையில் கல்வியுரிமை உள்ளிட்ட பலவும் மீறப்பட்டு வந்தமையும் புதிய விடயமல்ல. இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் கடந்து விட்டன இந்த 200 வருடகால வரலாற்றுக்கும் அவர்களின் வாழ்க்கை அபிவிருத்திக்கும் இடையே பாரிய விரிசல் நிலை காணப்படுகின்றமை யாவரும் அறிந்ததேயாகும் இதேவேளை இக்காலப்பகுதியில் இம்மக்கள் சில அடைவுகளையும் பெற்றுக் கொண்டுள்ளமையையும் மறுப்பதற்கில்லை. இது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்

மலையக மக்களிடையே இன்னும் அபிவிருத்தியடைய வேண்டிய பல விடயங்கள் காணப்படுகின்றன. அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, தொழில்வாய்ப்பு, வீடமைப்பு, சுகாதாரம், மருத்துவம், உட்கட்டமைப்பு எனப்பலவும் இதில் உள்ளடங்கும் இத்துறைகளின் அபிவிருத்தி கருதி மலையக அரசியல்வாதிகள் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திடம் அவ்வப்போது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். எனினும் இக்கோரிக்கைகளில் ஒரு சில கோரிக்கைகள் ஓரளவு சாத்தியமாகியுள்ள நிலையில் இன்னும் பல கேள்விக்குறியாக தொடர்ந்து கொண்டிருக்கின்றன இதனிடையே இவ்வருடம் தேர்தல் காலம் என்பதால் மலையக அரசியல் கட்சிகள், பிரதானகட்சிகளிடத்தில்கோரிக்கைகள் பலவற்றையும் முன்வைத்துள்ளதோடு இவற்றை நிறைவேற்றித் தருபவர்களுக்கு தாம் ஆதரவு வழங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளன.

இதனடிப்படையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடமே கூடி முடிவெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மூன்று முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன இக்கோரிக்கைகளை ரணில் நிறைவேற்றிக் கொடுப்பாராயின் அவருக்கு தேர்தலில் ஆதரவு வழங்குவோம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதி கள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்

**அவர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பின்வருமாறு:-**

மலையகத்தில் வீட்டுத்திட்டம் அமுல்படுத்



தப்பட வேண்டும் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம் காணி உரிமை மலையக மக்களுக்கு அவசியமாகும் இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி நான் காயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் காணி உரித்து விரைவில் வழங்கப்பட வேண்டும் என்பது இதொகாவின் கோரிக்கைகளாக உள்ளது இந்நிலையில் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் இம்மாதத்தில் சாத்தியமாகும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்கனவே நம்பிக்கை தெரிவித்திருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்



## தேசிய நீரோட்டத்தில் பங்கு

இதேவேளை மலையக சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பு அவசியமென்றும் அதற்கான உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரித்தானி

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# மே நாள்

# புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெற்ற 2024 மே நாள் புகைப்படத் தொகுப்பு
































# முழு அளவிலான ஓர் யுத்தத்தை நோக்கி உலகைத் தள்ளும் அமெரிக்க, பிரித்தானிய அரசுகள்

மேற்குலகத்தின் அரசியலைப் பொறுத்த வரையில் கடந்த சில வாரங்கள் நடைபெற்ற நிகழ்வுகள் ஒரு திடீர் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. உக்ரேன் - ரஷ்ய யுத்தம் தொடர்பான விடயத்தில், அமெரிக்காவும் மேற்குலகமும் ஒரு சோர்வான தன்மையை நோக்கி அண்மைக்காலமாக நகர்ந்துகொண்டிருந்தன. இவ்வாறான ஒரு பின்புலத்தில், இஸ்ரேல் மீது ஈரான் அண்மையில் தொடுத்த தாக்குதல், றொனால்ட் றேகனை அவரது புதைகுழியிலிருந்து விழித்தெழ வைத்தது மட்டுமன்றி, அத்திலாந்திக் சமுத்திரத்தின் இருபுறமும் பழமைவாதக் குரல்களுக்கு ஒரு புதுவித எழுச்சியையும் கொடுத் திருக்கின்றது.



அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாய கரான மைக் ஜோண்சன், தனது நிலைப் பாட்டிலிருந்து முற்றுமுழுதாக 180 பாகை திரும்பி, தான் 'ஒரு றேகன் வழிவந்த குடியரசுவாதி' என்று முழக்கமிட்டதோடு, 'தீமையின் அச்சு' என்று முன்னர் விபரித்து, நீண்டகாலமாகத் தான் தடுத்து வந்த, வானியல் தொடர்பான வெளிநாட்டுச் செலவுகள் சம்பந்தப்பட்ட உதவிக்கோரிக்கைகள் பலவற்றுக்கு நிதிவழங்குவதற்கு தற்போது அனுமதி கொடுத்திருக்கிறார். அதுமட்டுமன்றி திடீரென்று ரிக்ரொக் சமூக வலைத்தளம் மீது எங்கோ இருந்து கொண்டுவரப்பட்ட தடையும் அவசரஅவசரமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக் கிறது.



இதனைத் தொடர்ந்து, இதுவரை வழங்கப் படாத அளவில், தனது மிகப் பெரும் நிதியுதவித் தொகையை உக்ரேனுக்கு வழங்குவதற்கு ஐக்கிய இராச்சியம் தீர்மானித்திருப்பதுடன், அதன் பிரதம மந்திரியான றிஷி சுணக், சர்வாதிகார அரசுகளின் அச்சு என்று கூறி, கருத்தியல் ரீதியிலான போர்ச் சொல்லாடல்களை வீசியெறிந்திருக்கிறார். இதே நேரம், போரின் தீவிரத்தன்மையை அதிகரிக்கும் என்று கருதி, இதுவரை கொடுக்காமல் தடுத்த வைத்திருந்த, 300 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கக்கூடிய ஏரிஏசிஎம்எஸ் (ATACMS Missiles) ஏவுகணைகளை உக்ரேனுக்கு பைடன் ஏற்கனவே அனுப்பியிருப்பதான செய்தியும் தற்போது வெளியில் கசிந்திருக்கிறது. இது இப்படியிருக்க ஏராளமான சீன ஏற்றுமதிப்பொருட்கள் தொடர் பான விசாரணைகளைத் தொடக்கி, ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிபரான ஊர்சுலா வொண் டேர் லேயன் சீனா மீது ஒரு பொருண்மியப் போரை முடுக்கிவிட்டிருக்கிறார்.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே தற்போது ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலை யைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அமெரிக் காவும் அதன் நட்புநாடுகளும், தமது தவறுகளை வெள்ளையடிப்பதற்காகப் பயன்படுத்துவது மட்டுமன்றி, உக்ரேன் யுத்தம், மற்றும் காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள ஆக்கி ரமிப்பு போன்ற விடயங்கள் காரணமாக, தாம் தொடர்ச்சியாக இழந்துவரும் மக்கள் ஆதரவை மீளவும் பெற்றுக்கொள்ள இந்த முறுகல் நிலையைப் பயன்படுத்துகிறார்களா என்ற கேள்வியையும் எழுப்பத் தோன்றுகிறது. இஸ்ரேல் மீது ஈரானின் தாக்குதலைத் தொடுக் கக் காரணமாக இருந்த டமாஸ்கசில் அமைந் திருக்கும் ஈரானியத் தூதரகத்தின் மீது இஸ் ரேலினால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல், வேண்டுமென்றே இவ்வாறான நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்பட்டதா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை. அதுமட்டுமன்றி, பிரதம மந்திரி நெத்தன்யாகுவும் மேற்குலக அரசுகளும் இதுவரை சந்தித்து வந்த எதிர்ப்புகளைக் குறைப்பதற்காகவும் இவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.



தமது செயற்பாடுகளால் தாம் தூண்டிவிட்ட யுத்தங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, வோஷிங்டனிலும் சரி, இலண்டனிலும் சரி, தற்போதுள்ள அதிகார மையங்கள் எந்தவிதத்திலும் தயாராக இல்லை என்பதையே இவ்வாறான விடயங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இவை போதாதென்று, மூன்றாவதாகச் சீனாவுடன் ஒரு யுத்தத்தையும் தொடங்குவதற்கான முனைப்பு களை இந்த நாடுகள் காட்டிவருகின்றன. அறநெறி ரீதியில் மேற்குலகம் இதுவரை அனுபவித்து வந்த மேலாண்மை இஸ்ரேல்-காஸா யுத்தத்தின் காரணமாக சுக்குநூறாக உடைவதை இவர்கள் எந்தவிதத்திலும் கவனத்தில் எடுத்ததாகத் தெரிய வில்லை. இங்கு, மேற்குலகின் கொள்கை 'ஒருவரின் இழப்பு மற்றவரின் வெற்றி' என்ற சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதுடன், தங்கள் மேலாண்மையைத் தாங்கள் இழந்துவிட்டதாக ஒப்பாரி வைப்பது மட்டுமன்றி, அந்த மேலாண்மையை எந்த விலை கொடுத்தும் மீண்டும் நிலைநாட்டவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. உலகை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வதற்கு மேற்குலகிடம் எந்தவிதமான தூரநோக்குப் பார்வையும் இல்லை என்பது மட்டுமன்றி, முன்னர் இருந்த நிலைக்கு உலகைமீண்டும்கொண்டுபோகவேண்டும்என்பது மாத்திரம் அவர்களது இலக்காக இருக்கின்றது. உலகில் தற்போது உருவாகிக்கொண்டிருக்கும் பல்துருவத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இவர்கள் எவரும் இல்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

தமிழில்: ஜெயந்திரன்

இவ்வாறான காரணங்களால், இவ்வாறான அரங்குகளில் சமரசம் செய்வதற்கு இந்த மேற்கு லகத் தலைவர்கள் எவ்விதத்திலும் தயாராக இல்லை என்பதுடன், எந்த சூழலிலும் மூலோபாய ரீதியிலான விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்வதற்கு இவர்கள் தயாராக இல்லை. உக்ரேனில் நடைபெறும் போரைப் பொறுத்த மட்டில் 'புட்டினைத் தோற்கடிப்பது' மட்டுமே இவர்களது இலக்காக இருப்பதுடன், நிலைமை இன்னும் மோசமான நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. இவ்வாறாக ஒரு பினாமி யுத்தத்தை (*proxy war*) நோக்கி அங்குலம் அங்குலமாக நிலைமை மோசமாகிக்கொண்டு வருவது அவதானிக்கப்பட வேண்டும். நேட்டோ அமைப்பின் இராணுவ ஆலோசகர்கள் ஏற்கனவே களத்துக்குச் சென்றிருப்பது மட்டுமன்றி, ரஷ்யா மீது உக்ரேன் தற்போது முன்னெடுக்கும் தாக்குதல்கள் நேட்டோவின் புலனாய்வு அமைப்பினால் வழிநடத்தப்படுவது மட்டுமன்றி, பிரித்தானிய உயர்தர இராணுவ அதிகாரிகளால் ஒருங்கிணைக்கப்படுவதையும் அறியமுடிகின்றது.

மேற்குலகத்தின் ஊடகத்தைப் பொறுத் தவரையில், குறிப்பாக பிரித்தானியாவின் ஊடகங் கள் போரைப் பற்றியே தற்போது பேசிக் கொண்டிருக்கின்றன. (அமெரிக்காவைப் பொறுத்த வரையில் ஊடகங்கள் இடையே வித்தியாசமான பார்வைகள் உண்டு). பிபிசி ஊடகமானது இடை விடாது உக்ரேனின் பரப்புரைகளை தாமும் பெரிய அளவில் எடுத்துவைப்பதுடன், போதிய ஆதாரங்களோ அல்லது நடைமுறைப் பெறு மதியோ இன்றி, உக்ரேனுக்கு உதவியாக அமையக்கூடிய வகையில் தமது பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன என்பது மட்டுமன்றி இதற்குமாறான குரல்கள் அனைத்துமே மௌனமாக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ரஷ்யாவு டன் பேச்சுவார்த்தையை மேற்கொள்வது தொடர் பாக எந்தவிதமான சிந்தனையும் மேற்கொள் ளப்படாமல், ரஷ்யாவுடன் ஓர் முழுமையான யுத்தத்தை முன்னெடுக்க இவர்கள் முடிவு செய்திருக்கக்கூடும். ஆகவே தான், இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதல் தொடர் பான அதிர்வலைகள் அனைத்தும் எல்லா முனைகளிலும் போரைத் தீவிரப்படுத்துவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் தேர்தல்கள் அண்மித்து வருவது இவ்வாறான ஒரு அணுகுமுறைக்கு இன்னும் ஓர் முக்கிய காரணமாகும்.



இவ்வாறான சூழ்நிலைகளின் காரணமாக, இரண்டாம் உலகப் போரின் பின்னரான எந்தக் காலகட்டத்திலும் இருக்காத வகையில், தற்போது, மிகவும் ஆபத்தானதும் நிச்சயமற்றதுமான ஒரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**வடக்கு - கிழக்கு ... தொடர்ச்சி ...**

வடகிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகளிடம் 13ஐ முழுமையாக அமுல் செய்வேன் என கூறி அதை தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச் செய்வதாக உறுதி அளித்தார்" என்று தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், "ஏனைய பிரதான சிங்கள வேட்பாளர்கள் ரணில், அனுர ஆகியோரிடம் தமிழர்களுக்கான தீர்வை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பிரசுரிக்க சொல்லுங்கள்" என்றும் கோரிக்கை முன்வைத்தார்.

கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தினக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மனோ கணேசன் இதனைத் தெரிவித்தார்.

### ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளை உடைத்தெறிவோம் - ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மே தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

"ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளை உடைத்தெறிவோம்" எனும் தொனிப்பொருளில் மானிப்பாய் தென்மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் மே தின நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுத்தல் மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த கருத்துரைகள் என்பன இடம்பெற்றன. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மே தினப் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்ம



லிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சின் தலைவர் வேந்தன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

### தோட்டத் தொழிலாளர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

தோட்டத் தொழிலாளர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்_தொழிலாளர் தின வாழ்த்துச் செய்தியில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருமலை மாவட்ட தலைவர் எஸ். குகதாசன்

தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை பெற ஒன்று பட வேண்டும் எனவும் தோட்டத் தொழிலாளர்களுக்கான உரிமை முழுமையாக வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினமான புதன் கிழமை(1) ஊடகங்களுக்கு விடுத்துள்ள மே தினச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியில் குடிசைக் கைத்தொழில் ஆடைத் தொழில்சாலைகளாக மாறின. மக்கள் வீடுகளில் வேலை செய்வதற்கு பதிலாக தொழிற்சாலைகளில் வேலை செய்தார்கள் இதன் போது அமெரிக்காவில் புரட்சி ஏற்பட்டது இதில் நால்வர் கொலை செய்யப்பட்டார்கள் மாக்சின் - கருத்துப்படி ஓய்வு எட்டு மணி நேர வேலை தேவை என கூறியுள்ளார். அடக்கப்படும் தமிழ் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் உரிமைகளை பெற தமிழினம் ஒன்று பட வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

• • •

**தமிழர் தரப்பு ... தொடர்ச்சி ...**

பயன்படுத்தப்படலாம் என்பதால் மிகவும் நிதானமாகத்தான் சஜித்தும் கருத்துக்களை முன்வைக்கின்றார். 2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சஜித் பிரேமதாஸ பெற்ற மொத்த வாக்குகள் சுமார் 11 இலட்சத்து 50 ஆயிரம். இது வடக்கு - கிழக்கின் மொத்த வாக்குகளில் 75 வீதத்துக்கும் அதிகமானது. யாழ்ப்பாணத்தில் அவர் சுமார் 84 வீதமான மக்கள் (312,722) சஜித்துக்கு வாக்களித்திருந்தார்கள். வடக்கு, கிழக்கில் தனக்கு இந்தளவு அபரிமிதமான வாக்குகள் இருக்கின்றன என சஜித் நம்பிக்கொண்டிருக்கின்றார் போலத் தெரிவிக்கின்றது. ஆனால், 2010, 2015 ஜனாதிபதித் தேர்தல்களைப் போல ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் 2019 இலும் தமிழர்கள் வாக்களித்திருந்தனர் என்பதே உண்மை. அதனால், இம்முறை தமிழ் வாக்குகளை அவ்வளவு இலகுவாக சஜித்தினால் பெற்றுவிட முடியாது.

அநுரகுமார திஸாநாயக்க, "மாகாண சபைகளைத் தமிழர்கள் விரும்புகின்றார்கள். அதனால், இருந்திட்டுப் போட்டும்" என்ற வகையில் பட்டும் படாமலும் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால், இனநெருக்கடிக்கான தீர்வாக அவர்கள் மாகாண சபைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வடக்கிலோ கிழக்கிலோ தமிழர்களுக்கு தான் கொடுக்கக்கூடிய எந்தவொரு வாக்குறுதியும் தமது சிங்கள வாக்குகளைப் பாதித்துவிடக் கூடாது என்பதில் அவரும் நிதானமாகவே இருக்கின்றார்.

இந்த நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக் கரு தமிழர்கள் மத்தியில் வலுப்பெறுமா? அது வலுப்பெற்றால், திரிசங்கு நிலையில் - அதாவது 50 வீதத்தை யாரும் பெற முடியாத நிலையில் தேர்தலின் முடிவுகள் வெளிவருமா? தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தலை ஒரு தீர்க்கமானதாக அவர்கள் பயன்படுத்த முடியும். தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்கிடையிலான முரண்பாடுகளை ஓரங்கட்டி வைத்துவிட்டு, நன்கு திட்டமிட்டு காய்களை நகர்த்தினால், ஜனாதி பதித் தேர்தலில் பலமான ஒரு செய்தியைக் கூறக் கூடியதாக இருக்கும்!

• • •

**வடக்கு கிழக்கு ... தொடர்ச்சி ...**

செண்பகத்தின் மெதுவான இருப்பிடம் பதிவான செடிகள் ஆகும். இதன் உயிரியல் பெயர் சென்ரோபஸ் சினென்சிஸ் (Centropus sinesis) ஆகும்.

செண்பகம் நத்தைகள், பூச்சிகள், தவளைகள், பாம்புகள் மற்றும் பல்லிகளை சாப்பிடும். அதே போல் மற்ற பறவைகளின் முட்டைகள் மற்றும் குஞ்சுகளையும் உண்ணும். இவர்களின் வேட்டைக் காலம் பெப்ரவரி முதல் செப்டம்பர் வரை நீடிக்கும். இது சுமார் 3 முதல் 4 முட்டைகளை இட்டு, அவற்றை அடைகாக்கும். முன்னர் நகரப்பகுதிகளில் அதிகளவில் காணப்படும் இந்த பறவை தற்போது அரிதாகவே காணப்படுகின்றது.

மரங்களை அமிப்பது, டெங்கு நோயின் அச்சம் காரணமாக நீர் நிலைகளை அழிப்பது மற்றும் பற்றைகளை அழிப்பது போன்றவை இந்த பறவை இனத்தின் உணவுத்தேவைகள் மற்றும் இருப்பிடங்களை குறைவடையச் செய்து வருகின்றது. காடுகள் மற்றும் பற்றைகளை அழித்து வீடுகளை கட்டுவதும் மற்றுமொரு காரணியாக கருதப்படுகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் இந்த பறவையினம் தமிழீழத்தில் இருந்து முற்றாக அழிந்து போகும் நிலை உருவாகலாம் எனவே இது தொடர்பில் பொதுமக்களும், பொது அமைப்புக்களும், கல்விசார் சமூகமும் கவனத்தில் எடுக்க வேண்டும் என கேட்கப்படுகின்றனர்.

**சொல்ஹெய்மின் ... தொடர்ச்சி ...**

பொதுமக்களின் காணிகளை கைப்பற்றுவதன் மூலம் இராணுவம் தொடர்ந்தும் தனது முகாம் களை விஸ்தரிக்க முயல்கின்றது. இந்து வழிபாட்டு தலங்களை பௌத்த மதகுருமாரும் தொ ல்பொருளியல் திணைக்களமும் கைப்பற்றுவதற்கு உதவுகின்றது. இது பாதுகாப்பின்மையை ஏற் படுத்துகின்றது அமைதிக்கு எதிரான சூழலை உருவாக்குகின்றது" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.



## பலிக்கடா ... தொடர்ச்சி ...

யாவின் உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டனிடம் ஏற்கனவே வலியுறுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும் அத்துடன் மலையக மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது

இதனிடையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மலையக மக்களின் அபிவிருத்தி கருதி அண்மையில் பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கி இருந்தார் மலையக மக்களை தொடர்ந்தும் மலையகத் தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழவைப்பதற்கு பதிலாக இலங்கை சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே தமது எதிர்பார்ப்பாகும் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காக இரண்டு நூற்றாண்டுகளாக உழைத்து வரும் மலையக தமிழ் மக்களை தொடர்ந்தும் தனியான இனக் குழுவாக அன்றி தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கான பணி மிகவும் சவால் நிறைந்தது ஆனாலும் இதற்கான துரித வேலைத்திட்டமொன்று அவசியமாகும் மலையக மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்படுதல் வேண்டும்

இதற்காக பிரதமர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது அதுமாத்திரமன்றி மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய பத்து பேர்ச் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையை பயிரிட்டு அவற்றை அவர்கள் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் பெருந்தோட்டத் துறையில் புரட்சிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் அதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்

இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது இதன்போது பல்வேறு கோரிக்கைகளையும் சஜித் பிரேமதாசாவிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்துள்ளது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் எதிர்பார்ப்பு என்பன தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு எடுத்துரைக்கப்பட்டு இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி கைச்சாத்திட்டுள்ளது பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும்அவர்கள் காணியுரிமை கனவு சாத்தியமாக வேண்டும் அவர்களுக்கு உரிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட வேண்டும்சிறுதோட்ட உரிமையாளர்களாக மலையக மக்கள் மாற்றம் பெறவேண்டும் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் முற்போக்கு கூட்டணி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது

### சஜித்தின் வாக்குறுதி

இதேவேளை ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் ஸ்தாபிக்கப்படும் விசேட ஜனாதிபதி செயலணியின்ஊடாக பெருந்தோட்ட மக்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும் பெருந்தோட்ட மக்களுக்கு காணியுரிமை மாத்திரமின்றி பயிர்ச்செய்கை, வீட்டு உறுதி, சிறுதோட்ட உரிமை என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் இதுவரை காலமும் இரண்டாம், மூன்றாம் வகுப்பு மக்களாக பார்க்கப்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கு புதுயுகமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் இது வசனங்களால் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குறுதியாக இருக்காது இதுவரை காலமும் வாக்குகளுக்காக அரசியல் ரீதியில் ஏமாற்றப்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கு பொருளாதார, சமூக சுதந்திரத்தை வழங்குவதற்கான பயணத்தை ஐக்கிய மக்கள் கூட்டணியாக நாம் ஆரம்பித்துள்ளோம் என்று சஜித் பிரேமதாசா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் வாக்குறுதி வழங்கி இருந்தார்

இவ்வாறாக தேர்தலுக்கு முன்னாள் கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதும், வாக்குறுதிகள் வழங்கப்படுவதும் இது முதலாவது முறையன்றுஉள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபை தேர்தல், பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல் போன்ற பல சந்தர்ப்பங்களிலும் இத்தகைய பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வாக்குறுதிகளும் வழங்கப்படுகின்றனஇது மட்டுமன்றி வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும் பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு, பொருளாதார அபிவிருத்தி போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பில் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றனஎனினும் இவ்வாக்குறுதி களில் எத்தனை வாக்குறுதிகள் சாத்தியமாகியுள்ளன என்று சிந்திக்கையில் திருப்திகொள்ள முடியவில்லை

இதேவேளை கடந்த முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட மேதினத்தின்போதும் மலையக மக்கள் சார்ந்த பல வாக்குறுதிகளை ஆட்சியாளர்கள் அள்ளி வழங்கினர்எனினும் இவ்வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறுவதிலேயே வெற்றி தங்கியுள்ளதுஅத்தோடு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேதின மேடையில் அறிவித்தார்இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டதுஎனினும் கம்பெனிகள் இத்தொகையை வழங்குவதற்கு ஏற்கனவே மறுப்பு தெரிவித்து வருகின்ற நிலையில் இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்று முன்னாள் பிரதியமைச்சர் வடிவேல் புத்திரசிகாமணி தெரிவித்திருக்கின்றார்

மலையக மக்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, வாக்குறுதி வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் இது வெறும் புஷ்வாணமாகிவிடக் கூடாது என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்மலையக மக்களின் வாழ்க்கை நிலைமைகள் அதள பாதாளத்தைநோக்கிசென்றுகொண்டிருக்கையில் அம்மக்களை பலிக்கடாவாக்கி யாரும் ஏமாற்றிப் பிழைக்க முற்படுதல் கூடாதுஅத்தோடு நாடுயர தோள்கொடுக்கும் இம்மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்கி தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ள ஆட்சியாளர்கள் முன்வருதல் வேண்டும்மேலும் இந்திய வம்சாவளி மக்கள்தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கான கௌரவத்தினை பெற்றுக் கொடுக்கவும் ஆட்சியாளர்கள் மறந்துவிடக் கூடாது

• • •

## பிரிந்து முன் ... தொடர்ச்சி ...

மேதின பேரணி நடைபெற்றுள்ளது.

அதேபோன்று கூட்டம் நடைபெற்ற இடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பொது போக்குவரத்திலும் தங்கள் வாகனங்களிலும் வருகைதந்து கலந்துகொண்டதை காணமுடிந்தது. காசு கொடுத்து அழைத்துவந்த கூட்டத்தினை விட உணர்வினால் கலந்துகொண்ட கூட்டமே அதிகமானதாகயிருந்ததுடன் தமது தமிழ் தேசிய உணர்வினை கிழக்கு தமிழர்கள் மீண்டும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே கிழக்கில் தமிழ் தேசிய அரசியலையும் தமிழர்களின் கோரிக்கைகளையும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும் கோரிக்கையினை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின் றோம்.கிழக்கில் தமிழ் தேசிய அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

வெறுமனே கிழக்கில் தமிழரசுக்கட்சியானாலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பானாலும் பிரிந்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் தமிழ் தேசிய அரசியலை ஒருபோதும் ஆதரிக்கும் நிலைமையினை ஏற்படுத்தாது.கிழக்கினைப் பொறுத்தவரையில் மேதினம் என்றாலும் படுகொலை நினைவேந்தல் நாளானாலும் தமிழர்களின் உரிமைப்போராட்டம் என்றாலும் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும்போதே அது கிழக்கில் பிள்ளையான் போன்ற அரசியல் வாதிகளை துரத்தியடிப்பதற்கான வழிகளை ஏற்படுத்தும். மாறாக தமிழ் தேசிய அரசியலை தங்களுக்கான போட்டி அரசியலாக மாற்றும்போது அது அவர்களை வளர்த்துவிடும் நிலைமையே கிழக்கில் ஏற்படுத்தும்.

தமிழ் தேசிய அரசியலை உண்மையாக வடகிழக்கு தமிழர்கள் மீதும் தமிழ் மண்ணும் மீதும் பற்றுக்கொண்டு செயற்படும் கட்சிகள் கிழக்கில் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு முன்வரவேண்டும். அவ்வாறு இல்லாமல் கட்சி அரசியலை மட்டும் நோக்காக கொண்டு கிழக்கில் அரசியல் முன்னெடுக்கப்படுமானால் அது தமிழ் தேசிய அரசியலை தமிழ் மக்கள் நிராகரிக்கும் நிலைமை ஏற்படும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

• • •

## முழு அளவி ... தொடர்ச்சி ...

கண்ணோக்கை தற்போதைய உலகம் எதிர்கொள்கிறது. நிலைமைகளை தீர ஆராய்ந்து அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்த பனிப்போர் காலத்தில் நாம் கண்ட தலைவர்களைப் போலன்றி, இப்போதுள்ள தலைவர்களோ, ஆக்ரோஷமானவர்களாகவும் தாம் தான் மீட்பர்கள் என்ற மனநிலையிலும், தமது மேலாண்மையை உறுதிப்படுத்துவதையுமே காணமுடிகின்றது. இந்தத்தலைவர்கள், உலகில் ஸ்திரமானதன்மையை விரும்புவதற்குப் பதிலாக 1914ம் ஆண்டுக்கு முன்னர் உலகில் நிலவிய சூழ்நிலையையே பிரதிபலிக்கிறார்கள். இவ்வாறான காரணங்களினால், போர் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு இந்த மேற்குலகத் தலைவர்கள் எந்தவிதமான முயற்சியையும் எடுக்காமல், தேவைப்பட்டால், போரை முன்னெடுக்க மட்டுமே இவர்கள் தயாராக இருக்கிறார்கள். பிரித்தானிய இராணுவக் கட்டமைப்பும் ஊடகங்களும் அண்மைக் காலங்களாக கட்டாய ஆட்சேர்ப்புத் தொடர்பாகப் பேசிவருவதை அவதானிக்கக்கூடியதாகவிருக்கின்றது. அமெரிக்காவில் அடுத்து நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் ஜோ பைடன் வெற்றிபெறுவாராக இருந்தால் எல்லா முனைகளிலும் போர் தீவிரமடையும் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். இவ்வாறான அனைத் தையும் கண்ணோக்கும் போது, மூன்றாம் உலகப் போர் என்பது ஏற்கனவே மக்கள் மத்தியில் நிலவுகின்ற அச்ச உணர்வுகளை பெரிதுபடுத்தும் ஒரு நாடகம் என்பதற்கு அப்பால், அது நாம் நிச்சயமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு யதார்த்தம் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

***நன்றி: rt.com***

**தனியார் நில ... தொடர்ச்சி ...**

போக்குகிறோம். ஜனாதிபதியாக தற்போது ரணில் அவர்களுக்கு மாலை அணிவித்து கைகொடுத்தவன் நான். எனவே எங்களுக்கு உறுதிப் பத்திரங்களை விரைவாக பெற்றுத் தாருங்கள் துறை முக அதிகார சபையினர் இங்கு வந்து அடிக்கடி அச்சுறுத்துகின்றனர் இதற்கு நாங்கள் அச்சப் படப் போவதில்லை. எங்கள் உரிமைகளை பெற்றுத் தாருங்கள்" என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

வட கிழக்கு மாகாணங்களில் நில அபகரிப்பு என்ற நிலையில் அதிகமாக சிறுபான்மை சமூகமே பாதிக்கப்பட்டுள்ளனர். அரசுடன் இருக்கும் அரசி யல் கட்சிகள் மக்கள் பிரதிநிதிகள் உட்பட எதிர் கட்சி பிரதிநிதிகள் மக்களின் காணி உரிமைகள் தொடர்பில் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும். நிம்மதியாக சுதந்தி ரமாக வாழ வழிசமைத்து கொடுக்க வேண்டும். தேர்தல் காலங்களில் மாத்திரம் கிராம மக்களை சந்திப்பதன்று அடிக்கடியாக மக்கள் பிரச்சினை களை ஆராய்ந்து பாராளுமன்றில் பேசுவதுடன் நிரந்தர தீர்வொன்றை பெற முயற்சிக்க வேண் டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப் படுகிறது.

முத்து நகர் மக்களின் நீண்ட கால கனவை அவர்கள் வெற்றி கொள்ள வேண்டும் இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் பிரிவுக்கான அமைப்பாளர் ராசிக் றியாஸ்தீன் இவ்வாறு கருத்து தெரிவித்தார்." ஏழை விவசாயிகள் வாழும் முத்து நகர் பகுதியை அந்நிய சக்திகளுக்கு வழங்கி ஏப்பமிட வேண்டாம். கரன்டை உற்பத்தி செய்து கரண்டை சாப்பிட முடியாது. இம் மக்களுக்கான காணி உரிமம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் காணி அமைச்சு மாவட்ட செயலகம் பிரதேச செயலகம் என பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் வழங்கப்பட்ட போதிலும் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. விவசாயிகள் இல்லை என்றால் உணவு இல்லை. நீங்கள் சாப்பிடும் போது விவசாயிகளின் ஞாபகம் உங்களுக்கு வரும். ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள். காணிகளுக்கான உரித்துப் பத்திரங்களை வழங் குங்கள் என ஜனாதிபதியை கோருகிறேன் என்றார்".

மக்களுடைய உரிமைகளை அவர்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டும். நில அப கரிப்புக்களை மேற்கொள்ளாது துறைமுக அதிகார சபை இதனை விடுவித்து உரித்து பத்திரங்களை வழங்க வேண்டும் எனவும் அம் மக்கள் எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர். • • •

**இவர்களை ... தொடர்ச்சி ...**

சபை காலுஊன்றுகின்ற இடங்களில் தமிழ் மக்களுக்குக் காணி கொடுத்ததாக எந்தத் தகவலும் இல்லை. தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைதான் நடந்துகொண்டிருக்கின்றது. இதனால், பெருந்தொகையான சிங்களவர்கள் முல்லைத்தீவு பகுதியில் காலூன்றிவிட்டார்கள். இதனால், சிங்களப் பிரதேச சபை ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதனால், எமது அடுத்த சந்ததிகள் சிங்கள மயமாக்கப்பட்ட முல்லைத்தீவுக்குள்தான் வாழப்போகின்றார்களா என்ற அச்சம் ஏற்படுகின்றது. மகாவலி அதிகார சபையை கட்டுப்படுத்தும் நிலையில் அரசாங்க அதிபர் கூட இல்லை. அவர்களுடன் பேசும் போது அதனை அறிய முடிகின்றது.

கிழக்கு மாகாண நிலைமைகள் அனை வருக்கும் தெரியும். அங்கு தமிழர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டு சிங்கள மய மாக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அதேநிலைதான் முல்லைத்தீவிலும் நடந்து கொண்டிருக்கின்றது.

குருந்தூர்மலை விடயத்திலும் பெரும் பாலானவர்கள் வந்தார்கள். ஆனால், எவ் வளவு பேர் அதில் கவனத்தை எடுத்துச் செயற்பட்டார்கள் என்பதும் அனைவருக்கும் தெரியும். கொக்குளாய் விவகாரை கட்டப்பட்ட இடத்தில் நாங்கள் பிரதிநிதிகளாகப் போய் ஒரு மாதமோ என்னவோ தொடர்ச்சியான ஒரு போராட்டத்தை நடத்தியிருந்தால் அது பெரிதாக வெடித்திருக்கும். அவ்வாறான ஒரு போராட்டத்தை முன்னெடுக்காமல், இடையில் ஒரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வருவது. ஒரு கோரிக்கையை முன்வைப்பது என்பன எந்தப் பயனையும் தரப்போவதில்லை. அவர்கள் குடியேற்றிக்கொண்டு இருக்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 32 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணி படையினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்றது. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் 2 இலட்சத்து 22 ஆயிரம் ஏக்கர் அடர்ந்த காடுதான் வன இலாகாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், அதற்குப் பின்னர் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் காணியை வன இலாகா அபகரித்திருக்கின்றது. இவ்வாறு இந்த காணி அபகரிப்பு தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இவை அனைத்தும் தமிழ் மக்கள் பாவித்த காணி. சிறுதானிய பயிர்ச் செய்கைக்கு நெற்செய்கை என்பவற்றுக்காக மக்கள் பயன்படுத்திய காணிகள்.

இன இலாகா திணைக்களம், வன ஜீவராசி கள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அதிகார சபையின் எல் திட்டம் மற்றும் படையினர் என ஒவ்வொரு தரப்பினரும் தமது பங்குக்கு காணிகளை அபகரித்துக்கொண்டிருக்கி ன்றார்கள்.

இதனைத் தடுக்க வேண்டுமானால், எம்மவர்கள் அங்கு களத்தில் இறங்கி தொடர்ச் சியாகப் போராட வேண்டும். கேப்பாப்புலவை நாங்கள் இவ்வாறான தொடர்ச்சியான போராட் டத்தினால்தான் மீட்டிருந்தோம்

• • •

**முல்லைத்தீவு இவ்வளவு பிரச்சி னைகளையும் எதிர்கொண்டு சிங்கள மயமாகிக்கொண்டுள்ள நிலையிலும் தமிழ்க் கட்சிகள் அதில் போதிய கவனத்தைச் செலுத்துவதில்லை என்று மக்கள் குற்றஞ் சாட்டிறார்கள். உண்மை நிலை என்ன?**

**தமிழ்ப் பொது ... தொடர்ச்சி ...**

**கிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதி தேர்தலை கையாள் வது.**

**2. ஜனாதிபதி தேர்தலை, ஜனாதி பதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக் கான பொது வாக்கெடுப்பாக கையாள்வது.**

**3. அதற்கு அமைய ஒரு தமிழ் பொது வேட்பாளரை எதிர்வரும்** ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது.

**4. அதற்காக சிவில் சமூகமும் தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.**

**5. தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்கால கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயல்படுவது.**

இந்தத் தீர்மானத்துக்கு நாற்பதுக்கும் அதிகமான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரசி யல், சமூக செயற்பாட்டாளர்களும் கையொப்ப மிட்டுள்ளார்கள்.

**இஸ்ரேலை ... தொடர்ச்சி ...**

மற்றும் முப்படைகளின் தளபதி ஆகியோர் மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் பிடிஆணை பிறப்பிக்கலாம் என்ற தகவலை புளும்பேர்க் ஊடகம் வெளியிட்டிருந்தது.

உக்ரைன், டாபர் மற்றும் சூடான் மீது நீதிமன்றம் மேற்கொள்ளும் விசாரணைகள் முக்கியமானவை. ஆனால் இஸ்ரேல் மீது அவர்கள் நடவடிக்கை எடுக்க முடியாது இதனை சொல்வதற்கு என்னை மன்னிக்கவும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காசா பகுதியில் இடம்பெறும் தாக்குதல் கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஐ.நாவின் அனைத்துலக நீதி மன்றம் அண்மையில் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது. எனினும் ஐ.நா பாதுகாப்பு சபையில் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்த தீர்மானங்களை அமெரிக்கா தனது மேலாண்மை அதிகாரத்தின் மூலம் முறியடித்து வருகின்றது.

**வன்முறையில் ... தொடர்ச்சி ...**

வன்முறையை சமூக வலைத்தளங்கள் உலக மக்களின் முன் கொண்டு வந்திருந்தன.

பாதிக்கப்பட்ட பெண்கள் அருகில் நின்ற காவல்துறையினரின் வாகனத்தில் ஏறி தம்மைகாப் பாற்றுமாறு மன்றாடியபோதும் காவல்துறையினர் அவர்களை காப்பாற்ற முன்வரவில்லை. மேலும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் அந்த பெண்களை காவல்துறை வாகனத்தில் இருந்து இழுத்துச் செல்வதையும் அவர்கள் வேடிக்கை பார்த்து நின்றதாக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவான மக்களின் முன்னிலை யில் இரு பெண்களும் பாலியல் பலவந்தப் படுத்துப்பப்பட்டுடன்இ நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டு பின்னர் பொதுமக்கள் முன்னி லையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து இரு இனங்களுக்கு இடையில் அந்தப் பகுதி யில் ஏற்பட்ட மோதல்களில் 200 இறக்கு மேற்பட்டவர் கள் கொல்லப்பட்டனர். உலகில் உள்ள பல மனித உரிமை அமைப்புக்கள் இது தொடர்பில் தமது கண்டனங்களைத் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது..

**இஸ்ரேலுடனான ... தொடர்ச்சி ...**

வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் கண்முன்னே ஒரு இனப் படுகொலை இடம் பெறுகின்றது. மனிதா பிமானம் இறக்கின்றது. இஸ்ரேல் என்ற முழு தேசமும் இனப்படுகொலையில் ஈடு படுகின்றது. எனவே ஒரு இனப்படு கொலையை மேற்கொள்ளும் அரசுடன் தனது நாடு இராஜதந்திர உறவுகளை வியாழக் கிழமையில்(2) இருந்து நிறுத்திக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொலம்பியா, பஹறின், சாட், சிலி, பிரேசில், கொண்டுஸ், பொலிவியா, பெலிசி, ஜோர்டான், துருக்கி மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இஸ்ரேலில் உள்ள தமது தூதுவர்களை திரும்ப அழைத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.